பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 10 2026 7 15
சனிக்கிழமை இரவு
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உயர் மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ சேவையை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

- உலகளாவிய பாதுகாப்பு நிலைமைக்கு ஏற்ப நவீன ராணுவ தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

- எதிர்க்கட்சியினர் ஜனநாயகத்துக்கு எதிராக செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் குற்றம் சாட்டியுள்ளார்.

- ஜம்மு-காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தான் பொய் பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

- ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் முதல் ஆட்டத்தில் பெங்களூரு – தில்லி அணியை வென்றது.

- இனி விரிவான செய்திகள் –

<><><><><><>

உயர் மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ சேவையை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உறுதி செய்ய வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் *Deoghar*-ரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், தரமான மருத்துவக்கல்வி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம், செவிலியர் பட்டங்களை அவர் வழங்கினார்.

11 மாணவர்களுக்கு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஜார்க்கண்ட் ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் காங்குவார், மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

<><><><><><>

உலகளாவிய பாதுகாப்பு நிலைமைக்கு ஏற்ப நவீன ராணுவ தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜோத்பூர் விமானப்படை தளத்தில் Tarang Shakti பயிற்சிகளை பார்வையிட்ட பின் உரையாற்றிய அவர், சுயசார்பு இந்தியா தொலைநோக்கு பார்வையில் ராணுவ தளவாடங்கள் உள்நாட்டிலேயே விற்பனை செய்து வருவதாக கூறினார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ், ராணுவத் தளவாடங்கள் உள்நாட்டிலேயே வடிவமைத்து உற்பத்தி செய்து பாதுகாப்புத்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

எதிர்க்கட்சியினர் ஜனநாயகத்துக்கு எதிராக செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்தியப்பிரதேச தலைநகர் போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிநாடு சக்திகளின் தூண்டுதலின் பேரில் எதிர்க்கட்சியினர் செயல்படுவதாக குறை கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு மக்கள் முழு ஆதரவை அளித்துவருவதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தியின் செயல்களை அவர் குறை கூறியுள்ளார்.

நமது நாட்டையை குறைகூறி, வெளிநாடுகளை ஆதரிப்பது அதிர்ச்சி அளிப்பதாகவும் குறிப்பிட்டார்

மேற்குவங்கம், அசாம், புதுச்சேரி இடைத்தேர்தல்களில் பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றது மக்களின் நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

<><><><><><>

நாட்டின் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்த தொழில் நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உள்நாட்டு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

தேசிய *Quantum* தொலைத்தொடர்பு இயக்கம் வளர்ச்சி அடைந்து வருவதாக கூறிய அவர், இத்துறையில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை அதிகமாக பயன்படுத்தி வருவதாக டாக்டர். ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

<><><><><><>

மேற்குவங்கம், புதுச்சேரி, அசாம் இடைதேர்தல்களில் பி.ஜே.பி.தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வென்றது ஜனநாயகத்தின் வெற்றி என்று பி.ஜே.பி. கூறியுள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத், எதிர்க்கட்சியினரின் அமைதியான போராட்டங்களை பி.ஜே.பி. எதிர்க்கப்போவதில்லை என்று கூறினார்.

தேர்தலில் தோல்வி அடைந்துவரும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் சாசன அமைப்புகளை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி குறை கூறி வருவதாக திரு. ரவிசங்கர் பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

<><><><><><>

அனைத்து வங்கிகளும் ரொக்க இருப்பு விகித்தை 99 சதவீதம் வைத்திருக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

வரும் 16 ஆம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய 90 சதவீத இருப்பு விகிதத்தில் இருந்து 99 சதவீதமாக அதிகரிக்கப்பட உள்ளதாக ரிசர்வ் வங்கி குறிப்பிட்டுள்ளது.

<><><><><><>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது பிரதமரின் வங்கி கணக்கு திட்டம்.

*பிரதமரின் ஜன்தன் யோஜ்னா வங்கிக் கணக்குத் திட்டம் நாட்டின் நிதிசார் வளர்ச்சியில் மைல்கல்லாக உள்ளது.*

*பிரதமர் திரு. நரேந்திரமோடி, இந்த திட்டத்தை கடந்த 2014 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.*

*இத்திட்டத்தின்கீழ் இதுவரை 59 கோடி ஜன்தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.*

*உலகிலேயே மிகப்பெரிய வங்கிக் கணக்குத் திட்டமாக இது திகழ்கிறது.*

*இதன் மூலம் நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களும் வங்கி வசதியை பெற்று நேரடி பணப்பரிமாற்ற பலன்களை பெற்று வருகின்றனர்.*

அரசின் நலத்திட்டங்கள் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்துவதன் மூலம் மூன்றரை லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திரமோடி, ஜன்தன் யோஜ்னா வங்கிக் கணக்குத் திட்டம் மூலம் நாட்டின் அனைத்து குடும்பத்தினரும் பயனடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

உலகிலேயே மிகப்பெரிய வங்கிக் கணக்கு திட்டம் மூலம் லட்சக்கணக்கான மக்கள் பயனடைந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

ஜன்தன் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் 10 ஆயிரம் ரூபாய் வரை முன்கூட்டியே பணம் எடுத்துக்கொள்ள வசதியை செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><>

ஜம்மு-காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தான் பொய் பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா. பொதுச்சபை விவாதத்தில் இதனை தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் Mahima Kumari Mewar கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜம்மு-காஷ்மீர் தொடர்பாக தவறான தகவல்களே ஐ.நா. மூலம் பாகிஸ்தான் பரப்பி வருவதாக சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீரில் மனித உரிமைமீறல்கள் நடந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரியா சரோஜ் பேசுகையில் குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது இந்தியா கடுமையான நடவடிக்கையை எடுத்துவருவதாக தெரிவித்தார்.

ஐ.நாவும், உறுப்பு நாடுகளுக்கிடையே ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

<><><><><><>

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவில் இருந்து டீசல் வாங்குவதற்கான திட்டத்தை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப் அறிவித்ததற்கு ஒருநாள் பிறகு இந்த தாக்குதல் நடைபெற்றதாக யுக்ரைன் சுட்டிக்காட்டியுள்ளது.

ரஷ்யாவில் இருந்து அமெரிக்கா டீசல் வாங்கினால் அந்த நிதி யுக்ரைன் மீதான போருக்கு பயன்படுத்தும் என்றும் கவலை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் டீசல் விலை அதிகரித்துவரும் நிலையில் ரஷ்யாவிடம் இருந்து டீசல் இறக்குமதி செய்ய அமெரிக்க திட்டமிட்டுள்ளது.

ரஷ்யா - யுக்ரைன் இடையே வான்வழித் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<><><><><><>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் முதல் ஆட்டத்தில் பெங்களூரு - தில்லி அணியை வென்றது.

பெங்களூருவில் இன்று நடைபெற்ற இப்போட்டியில், *3-2* என்ற கோல்கணக்கில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

இன்னும் சற்றுநேரத்தில் *Margao*ல் தொடங்க உள்ள மற்றொரு ஆட்டத்தில் சென்னை – கோவா அணியை எதிர்கொள்கிறது.

-----------

*15* வயதிற்குட்பட்டோருக்கான தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் *Himon Kumar* மற்றும் *Tanishka* சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் மேற்குவங்கத்தின் *Himon Kumar, 3-2* என்ற கணக்கில் *Rishaan*வை வென்றார்.

பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் தனிஷ்கா *3-1* என்ற கணக்கில் ஆர்யவை வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

-----------

எகிப்து ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், *11-5, 11-2, 11- 4* என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் *Bernat Jaume*-வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் *Anahat Singh*-ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

*Kigali* சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் டேவ் ஜாவியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் *6-3, 6-7* என்ற செட்கணக்கில் பிரான்சின் *Corentin Denolly* வென்றார்.

-----------

*Lagos* சர்வேதச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார். -----

-----